THE MADRAS LEGISLATIVE COUNCIL.

Wednesday, the 6th March 1968.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. THIRU M.A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Dramas

*** 181 *Q*.—THIRU N. R. THIAGARAJAN** : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether permission of the Government has to be obtained for staging dramas ;

(*b*) whether the dramatic scripts are censored ;

(*c*) the places in Tamilnad where permission was refused for staging dramas from 1st March 1967 to 31st August 1967 ; and

(*d*) the reasons therefor ?

நாடகங்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாடகங்கள் நடத்த சர்க்காரின் அனுமதி பெறவேண்டுமா ?

(ஆ) நாடக வசனங்கள் தணிக்கை செய்யப்படுகின்றதா ?

(இ) 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் தேதியிலிருந்து ஆகஸ்டு மாதம் 31-ம் தேதி வரை தமிழகத்தில் எங்கெங்கு நாடகம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டது ?

(ஈ) அதற்கான காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (on behalf of the Hon. the Chief Minister) : (அ), (ஆ), (இ) and (ஈ) நாடகம் ஒன்றை நடத்துவதற்கு அனுமதி ஏதும் தேவையில்லை. ஆனால் ஏதேனும் ஒரு நாடகம் ஆட்சேபிக்கப்படுவதற்குரியதென மாவட்டத்தில் உரிமம் வழங்கும் அதிகாரியாகிய கலெக்டரும் சென்னை மாநகரில் காவல் துறை ஆணையரும் கருதினால், அந்த நாடகம் நடைபெறுவதைத் தடை செய்ய அவர்களுக்கு அதிகாரமுண்டு. நாடக அமைப்பாளர், உரிமம் வழங்கும் அதிகாரியிடம் நாடகப் படியைத் தாமாகவே கொடுத்து நாடகம் ஆட்சேபணைக்குரியதல்ல என்னும் சான்றிதழைப் பெற்றுக் கொள்கிறார். 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் தேதி முதல் ஆகஸ்டு மாதம் 31-ம் தேதி வரை உள்ள கால அளவில், ஒரே ஒரு நாடகத்தில் மட்டுமே ஆட்சேபிப்பதற்குரிய பகுதியிருந்ததால் அந்த நாடகத்திற்கு மட்டும் அனுமதி மறுக்கப்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, இந்த நாடகங்கள் நடத்துவதற்கு முன்கூட்டியே அதன் கதை, வசனம் போன்றவைகளை கலெக்டரிடம் கொடுக்கவேண்டுமா ? அதைச் சரிபார்த்த பிறகு தான் நாடகம் நடத்த அனுமதி கொடுக்கப்படுகிறதா ? ஆட்சேபணை உள்ள பகுதி எது என்று கருதப்படுகிறது ? அதை முன் கூட்டியே சொல்லி விட்டால், எழுதுபவர்கள் மாற்றி எழுதுவதற்கு வசதியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, 1954-ம் ஆண்டு சென்னை நாடக நிகழ்ச்சிகள் சட்டத்தின் 2 (1) பிரிவின்கீழ் (1) இந்தியாவில் அல்லது மாநிலம் ஒன்றில், சட்டப்படி நிறுவப்பட்ட அரசாங்கத்

தையேனும் ஒரு பகுதியில் அதன் அதிகாரத்தையேனும், கவிழ்ப்பதற்காக அல்லது கீழறுப்பதற்காக வன்முறையையோ நாசவேலைகளையோ கைக்கொள்ளுமாறு ஒருவரைத் தூண்டக் கூடியதாகவோ அல்லது (2) கொலை, நாசவேலைகள் அல்லது வன்முறை பொருந்திய ஒரு குற்றத்தைச் செய்யுமாறு ஒருவரைத் தூண்டக்கூடியதாகவோ அல்லது மைய அரசைச் சேர்ந்த படைகலன் தாங்கிய படைகளிலே அல்லது காவல் துறைப் படைகளிலே ஒன்றைச் சேர்ந்த ஒருவர் தமது பற்றினின்றும் அல்லது கடமையினின்றும் பிறழும்படிச் செய்யக் கூடியதாகவோ, அல்லது அத்தகைய ஒரு படையில் பணியாற்றுவதற்கு நபர்களைத் தேர்ந்தெடுத்து நியமிக்கும் பணிக்குக் குந்தகம் ஏற்படக் கூடியதாகவோ அல்லது அத்தகைய ஒரு படையின் ஒழுங்குமுறையைக் குலைக்கக் கூடியதாகவோ அல்லது இந்தியக் குடிமக்களின் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களுக்கெதிராக வன்முறை செயல்களில் ஈடுபடும்படி இந்திய குடிமக்களில் வேறொருப் பிரிவைச் சேர்ந்தவர்களைத் தூண்டக்கூடியதாகவோ அல்லது இந்தியக் குடி மக்களின் ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்களின் சமயத்தையோ மத நம்பிக்கைகளையோ அவமதிப்பதன் மூலம் அல்லது தூற்றுவதன் அல்லது இழித்துரைப்பதன் மூலம் அவ் வகுப்பினரின் மத உணர்ச்சிகளை வேண்டுமென்றே நிந்தனைக் குள்ளாக்குவதென்னும் நோக்கமுடையதாகவோ அல்லது பெரிதும் அநாகரீகமான அல்லது தூற்றுகிற சொற்கள் கொண்டுள்ள அல்லது ஆபாசமான அல்லது அவதூறு சொல்லிப் பணம் பறிப்பதைக் கருத்தாகக் கொண்டுள்ளதாகவோ இருக்கக்கூடிய எந்த ஒரு நாடகமும் அல்லது ஆடல், அபிநயக் கூத்தும் ஆட்சேபகரமான நிகழ்ச்சி எனப் பொருள் படும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, ஒரே ஒரு நாடகத்திற்கு மட்டும் ஆட்சேபனை காரணமாக அனுமதி மறுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நாடகம் எந்த நாடகம் ? எந்த ஊரில் ஆட்சேபிக்கப்பட்டது ? அந்த நாடகத்தில் எந்தக் கருத்து ஆட்சேபனைக்குரியதாக கருதப்பட்டது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பெயரைக் கேட்டாலே புரிந்து கொள்ளலாம். நாடகத்தின் பெயர் "அலறுகின்றார் அண்ணா". அந்த நாடகம்தான் ஆட்சேபிக்கப்பட்டது, மாவட்ட போலீஸ் கமிஷனர் அவர்களால் ?

திரு. கே. ராமதாஸ் : தலைவரவர்களே, ஒரே ஒரு நாடகத்திற்குத்தான் அனுமதி மறுக்கப்பட்டது என்று சொன்னார்கள். சென்னை நகரத்தில் மட்டும் மூன்று நாடகங்கள் தடை செய்யப்பட்டு, அதனால், நாடகம் ஏற்பாடு முன்பே செய்துவிட்டபடியால், நஷ்டமடைய நேரிட்டது. அரசியல் நாடகம் என்ற காரணத்திற்காக அவைகள் தடை செய்யப்பட்டது என்பதை அறிவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, "அலறுகின்றார் அண்ணா" என்ற நாடகம் தடை செய்யப்பட்டது. அந்த நாடகத்தில் ஆட்சேபனைக்குரிய பகுதிகள் இருந்தது என்ற காரணத்தால் போலீஸ் கமிஷனர் தடை செய்துவிட்டார். அடுத்து, "கோட்டையிலே கோமான்கள்" என்ற நாடகத்திற்கு—இந்த நாடகத்திற்கு முதலில் கோட்டையிலே கோமாளிகள் என்று பெயர் வைத்தார்கள். அந்த நாடகத்தை நடத்த போலீஸ் கமிஷனரை அனுமதி கேட்டார்கள். அவர் ஆட்சேபகரமான பகுதிகளைச் சுட்டிக் காட்டிய பிறகு, அதை எழுதிய நண்பர் அந்தப் பகுதிகளை விலக்கிவிட்டு மறுபடியும் போலீஸ் அனுமதி பெற்று நாடகம் நடத்தியிருக்கிறார்கள்.

திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, பழைய அரசாங்கம் எத்தனை நாடகங்களை நடத்த தடை போட்டிருக்கிறார்கள் ? அவை என்னென்ன ?

6th March 1968]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பழைய அரசில், போலீஸ் கமிஷனர், மாவட்ட ஆட்சித் தலைவர் அன்னியில், சர்க்காரே தலையிட்டு தடை விதிக்கப்பட்ட நாடகங்கள் 21, அவையாவன :—

இரணியன்—1946-ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ம் தேதி; சர்வாதிகாரி—1948-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 21-ம் தேதி, மகாத்மாவின் தொண்டன்—1949-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5-ம் தேதி; தூக்குமேடை—1949-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 25-ம் தேதி; சம்ஸ்கிருத தெலுங்கு நாடகம் ஒன்று—1949-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 3-ம் தேதி, புரட்சி 1949-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27-ம் தேதி; நல்ல முடிவு—1950-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ம்தேதி; போர்வாள்—1951-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ம் தேதி; மக்கள் துரோகி—1951-ம் ஆண்டு மே மாதம் 3-ம் தேதி; மறுமலர்ச்சி—1952-ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் தேதி; முருகன்—1952-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17-ம் தேதி; பணக்காரன்—1953-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ம் தேதி; எமலோகத்தில் பெரியார்—1953-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ம் தேதி; அன்பின் வெற்றி—1954-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9-ம் தேதி; அண்டி கிறிஸ்டு—1954-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9-ம் தேதி; வால்மீகி ராமாயணம்—1954-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28-ம் தேதி; மர்ம வீரன்—1954-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 3-ம் தேதி; போராட்டம்—1956-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 18-ம் தேதி; உதய சூரியன்—1960-ம் ஆண்டு மே மாதம் 3-ம் தேதி.

திரு. எம். எத்திராஜுலு : உலகத் தமிழ் மகாநாட்டில் "தமிழ் எங்கள் உயிர்" என்ற நாடகம் நடத்தியபோது, அதில் மத்திய சர்க்கார் அமைச்சர்களைக் கூடத் தாக்கிப் பேசியதாக கருதப்படுகிறது. அப்படியானால் அந்த "தமிழ் எங்கள் உயிர்" என்ற நாடகம் தணிக்கை செய்யப்பட்டதா? அப்படிச் செய்யப்பட்டு சர்க்காருக்கு ஏதேனும் குறிப்பு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த "தமிழ் எங்கள் உயிர்" என்ற நாடகம் எஸ். எஸ். ராஜேந்திரன் நடத்திய நாடகம். அந்த நாடகத்தில் எந்த விதமான ஆட்சேபனையும் இருந்ததாகக் கருதப்படவில்லை. உறுப்பினர் அவர்களும் கருதப்படுகிறது என்று சொல்கிறாரே தவிர, தாம் பார்த்ததாகவோ குறிப்பிட்ட இடத்தை சுட்டிக் காட்டி மத்திய அமைச்சரைத் தாக்கியதாகவோ சொல்லவில்லை. எஸ். எஸ். ஆர். நடத்திய அந்த நாடகம் சமூக நாடகமல்ல. பழைய சரித்திர நாடகம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : நாடகம் நடத்துவதற்கு முன்பே தணிக்கை செய்வதற்கு வசனங்களைத் தணிக்கை அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கவேண்டுமென்ற உத்தரவு புதிய ஆட்சி வந்த பிறகு போட்ட உத்தரவா? அல்லது பழைய ஆட்சிக் காலத்திலிருந்த உத்தரவா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பழைய ஆட்சிக் காலத்திலிருந்து அமுலாகி வரும் உத்தரவு தான்.

திரு. கே. ராமதாஸ் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நாடகத்திலே இருக்கிற ஆட்சேபகரமான சொற்களை அகற்றிவிட்டால், அந்த நாடகத்தை நடத்தலாம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் பெயரைக் கேட்டவுடனேயே "சிங்கப்பூர் திருடன்" என்ற நாடகத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது தெரியுமா?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல மாண்புகளை உணர்ந்திருப்பவர். பண்பாடுகளை எல்லாம் உணர்ந்திருப்பவர். "சிங்கப்பூர் திருடன்" என்பது எந்த அர்த்தத்திலே பத்திரிகையில் கட்டுரையாக எழுதப்பட்டு வருகிறது என்பதை அவர் அறிவார். மனச்சாட்சியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டு அந்த தலைப்பு பொருத்தம் தானா என்பதை அவர் எண்ணிப் பார்க்கவேண்டும். இது போல மற்றவர்களும் எழுத ஆரம்பித்தால் அப்படிப்பட்ட நாடகங்கள் வருமானால் நாடு ஒரு அமளிக் கூடமாக ஆகுமே தவிர நாடாக இருக்காது.

[6th March 1968

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, சென்றவாரம் ஞாயிற்றுக்கிழமையன்று, மவுண்ட் ரோட்டில் "சபையர்" தியேட்டரில் "முகம்மது பின் துக்ளக்" என்ற நாடகம் நடந்ததைப் பார்க்க நண்பர் ஒருவர் என்னைக் கூட்டிக்கொண்டு போனார். அதிலே அரசியல்வாதிகள் யாராக இருந்தாலும் அவர்கள் எல்லாம் அயோக்கியர்கள் என்றும், எந்த கவர்ன்மெண்ட் பதவிக்கு வந்தாலும் சுய நலத்தை முன்னிட்டுத் தான் நிர்வாகத்தை நடத்துகிறார்கள் என்ற கருத்தையும் மக்களிடையே பரப்பும் நிலையில், அந்த நாடகம் நடத்தப்படுகிறது. அதைச் சர்க்கார் கவனித்துத் தடுக்க முயற்சி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : "முகமது பின் துக்ளக்" என்ற நாடகத்தின் விளம்பரத்தைப் பார்த்தால் அது சரித்திர நாடகம் போலத் தோன்றியது. கனம் உறுப்பினர் அந்த நாடகத்தில் எல்லா அரசியல் கட்சிக்காரர்களும் அயோக்கியர்கள் என்று சொல்வதாகக் கூறினார். காலையில் கீழ் சபையில் சொல்லும்போது, எல்லோரையும் முட்டாள் என்று சொல்லிவிட்டு, நடிக்கிற தன்னையே முட்டாள் என்று சொல்லிக்கொள்வதாகச் சொன்னார்கள். ஆகவே, அப்படி கேலிக்காக கூட குறிப்பிடும் வாசகமாக இருக்கலாம். அதைப் பற்றி ஆராய்ந்த பிறகு தான் சொல்லப்படவேண்டும்.

Misappropriation of funds

*** 182 *Q*.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—**

(*a*) whether anybody misappropriated Rs. 5,050 in the Police Department in Madurai recently ; and

(*b*) if so, the action taken thereon ?

நிதி கையாடல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சமீபத்தில் மதுரை போலீஸ் இலாகாவில் யாராவது ரூ. 5,050 கையாடல் செய்தாரா ?

(இ) ஆமெனில் அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (on behalf of the Hon. the Chief Minister) : (அ) ஆம்.

(இ) சம்பந்தப்பட்ட கருவூல நேர்முக சேவகர் வேலையிலிருந்து தள்ளப்பட்டார்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, வேலையிலிருந்து தள்ளப்பட்டது சரி, பணத்தை வசூல் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? இத்தகைய எண்ணங்கள் அந்த இலாகாவில் வேலை செய்பவர்களுக்கு வரக் காரணமென்ன ? அதைத் தடுக்க அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த இலாகாவில் புதிதாக வந்த கருவூல நேர்முக சேவகர் (Lance Nayak) பெரிய கருப்பண்ணன் என்பவருக்குப் பயிற்சியளிக்க, அங்கேயிருந்த பழைய ஆள் ராஜி என்பவர் அமர்த்தப்பட்டார். அது எப்படிப்பட்ட பயிற்சி என்றால், கருவூலத்திற்குச் சென்று பணங்களை மாற்றுவதும், பாங்கிற்கு சென்று பணங்களை மாற்றுவதற்கும் ஆக போலீஸ் இலாகாவிலிருந்து அனுப்புவதாகும். அப்படி அனுப்பப்பட்ட பெரிய கருப்பண்ணனுக்கு இந்த ராஜு ஒத்தாசையாக இருந்து கொண்டிருந்தார். ஒரு நாள் இருவரும் சென்று கருவூலத்தில்